கனரா வங்கி சார்பில்

கிராமப்புற பெண்கள் மேம்பாட்டு அறக்கட்டளைக்கு நிதியுதவி

தாரமங்கலம் கிராமப்புற பெண்கள் மேம்பாட்டு அக்கட்டளைக்கு காசோலை வழங்கிய உதவி பொது மேலாளர் டி.பி.ஹனீஷ் பாபு.

சேலம், ஜூன் 18: சேலம் கனரா வங்கி மண்டல அலுவலகம் சார்பில், கிராமப்புற வளர்ச்சி மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சேலம் மண்டலத் தலைவரும், உதவிப் பொது மேலாளருமான டி.பி.ஹனீஷ் பாபு பங்கேற்று, தாரமங்கலம் கிராமப்புற பெண்கள் மேம்பாட்டு அறக்கட்டளைக்கு விவசாய ட்ரோன் வாங்குவதற்கு ரூ. 7,33,444-க்கான காசோலையை வழங்கி, ட்ரோன் சேவையை தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து, அங்கு கூடியிருந்த பெண் விவசாயிகளிடையே அவர் பேசுகையில், விவசாயிகள் எளிமையாகவும் பாதுகாப்பாகவும் பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்க இந்த நவீன தொழில்நுட்பம் பெரிதும் உதவும். அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வங்கியின் பல்வேறு கடன் திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்றார்.

தொடர்ந்து, பசுமையை போற்றும் விதமாக பெண் விவசாயிகளுக்கு மரக் கன்றுகளை வழங்கினார்.

வேளாண், கல்விக்கடன் உள்ளிட்ட திட்டங்களுக்கு ரூ.38,134 கோடி கடனுதவி: ஆட்சியர்

சேலம் ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற வங்கியாளர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் பேசிய ஆட்சியர் க.இளம்பகவத்.

சேலம், ஜூன் 18: சேலம் மாவட்டத்தில் வேளாண்மை, கல்விக்கடன், சிறு, குறு தொழில் நிறுவனங்கள், மகளிர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முன்னுரிமை திட்டங்களுக்காக ஏப்ரல் 2025 – மார்ச் 2026 நிதியாண்டில் ரூ. 38,134 கோடி மதிப்பிலான கடன் வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் க.இளம்பகவத் கூறினார்.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான வங்கிகளின் 2025-2026 நிதி ஆண்டுக்கான ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் க.இளம்பகவத் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் ஆட்சியர் தெரிவித்ததாவது:

சேலம் மாவட்டத்தில் 239 பொதுத்துறை வங்கிக் கிளைகள், 202 தனியார் வங்கிகள், தமிழ்நாடு கிராம வங்கி, மாவட்ட கூட்டுறவு வங்கி உள்ளிட்ட 121 அரசு சார்ந்த வங்கிகள் என மொத்தம் 562 வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் இவ்வங்கிகள் மூலம் வேளாண்மை, கல்விக்கடன், சிறு, குறு தொழில்நிறுவனங்கள், மகளிர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முன்னுரிமை திட்டங்களுக்காக ஏப்ரல் 2025 முதல் மார்ச் 2026 நிதியாண்டில் ரூ. 38,134 கோடி மதிப்பிலான கடன் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் வங்கிகள் மூலம் 2025-26 நிதியாண்டில் வேளாண்மை திட்டங்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழு கடனுதவிகள் என ரூ. 25,001 கோடியும், சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 11,320 கோடியும், மாணவ, மாணவிகளுக்கு ரூ. 64.55 கோடி கல்விக் கடனும் என பல்வேறு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட தொழில்மையம், தாட்கோ, மகளிர் திட்டம், கல்விக் கடன் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகள் வங்கிகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ. 1,715 கோடியைக் காட்டிலும் ரூ. 5 கோடி அதிகமாக ரூ. 1,720 கோடி வழங்கி தமிழ்நாட்டிலேயே சேலம் மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது என்றார்.

இக்கூட்டத்தில், ரிசர்வ்வங்கியின் மேலாளர் அன்பரசு, பாரத ஸ்டேட் வங்கியின் மண்டல மேலாளர் அஸ்வத் துரை செல்வம், முன்னோடி வங்கி மேலாளர் பி.செந்தில்குமார், மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் பிரசன்னா, நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் ஷீபா, தாட்கோ மாவட்ட மேலாளர் சக்திவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பிஎம்-விபிஆர்ஒய் திட்டம்

சேலம், ஒசூரில் இன்று ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி

சேலம், ஜூன் 18: சேலம் மண்டலத்தில் பிஎம்-விபிஆர்ஒய் திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகையை வழங்கும் நிகழ்ச்சி சேலம், ஒசூரில் வெள்ளிக்கிழமை (ஜூன் 19) நடைபெறுகிறது.

இதுகுறித்து சேலம் மண்டல வருங்கால வைப்புநிதி ஆணையர் ராகேஷ் எஸ்.சேகர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பிரதமர் மோடி 19-ஆம் தேதி மாலை 5 மணிக்கு தில்லி விஞ்ஞான் பவனில் நடைபெறும் நிகழ்ச்சியில் இந்த திட்டத்தின்கீழ் ரூ. 2,400 கோடி மதிப்பிலான ஊக்கத்தொகையை வழங்க உள்ளார். இதனுடன் நாடுமுழுவதும் 200 இடங்களில் வட்டார நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதன்படி, சேலத்தில் சூரமங்கலம் ரயில்வே அதிகாரிகள் கிளப் (டிஆர்எம் அலுவலகம்), ஒசூரில் தொழில்துறை சங்கம் (சிப்காட்) ஆகிய இடங்களில் மாலை 4.15 மணிமுதல் நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன.

பொருளாதார வளர்ச்சியில் உற்பத்தி துறையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, உற்பத்தி துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் 4 ஆண்டுகள்வரை ஊக்கத்தொகை பெற முடியும். மற்ற அனைத்து துறைகளிலும் உள்ள நிறுவனங்கள் 2 ஆண்டுகள்வரை இந்த ஊக்கத்தொகையை பெறலாம். வேலைவாய்ப்பு சார்ந்த சூழலை உருவாக்குவதற்கும், இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தின் பலன்கள் இளைஞர்களுக்கு தரமான, முறைப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பாக கிடைக்க இந்த திட்டம் வழிவகை செய்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை

சேலம், ஜூன் 18: சேலம் மேற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் வியாழக்கிழமை சோதனை செய்தனர்.

சேலம் கந்தம்பட்டியில் உள்ள மேற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பல்வேறு பணிகளுக்கு லஞ்சம் வாங்குவதாக லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸாருக்கு புகார்கள் வந்தன.

அதன்போரில், லஞ்ச ஒழிப்பு காவல் ஆய்வாளர் ரவிக்குமார் தலைமையிலான போலீஸார், மேற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வியாழக்கிழமை சோதனை நடத்தினர்.

அதில், இடைத்தரகர்கள் வாகனத்தில் இருந்து ரூ. 50 ஆயிரம் ரொக்கம் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. எனினும், சோதனை குறித்த விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை. தொடர்ந்து, விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாணவியிடம் கைப்பேசி எண் கேட்ட இருவர் போக்சோவில் கைது

வாழப்பாடி, ஜூன் 18: வாழப்பாடி அருகே 17 வயது மாணவியிடம் கைப்பேசி எண் கேட்ட இருவரை போலீஸார் போக்சோ சட்டத்தின் கீழ் வியாழக்கிழமை கைது செய்து சேலம் சிறையில் அடைத்தனர்.

வாழப்பாடியை அடுத்த எம்.பெருமாபாளையம் பகுதியைச் சேர்ந்த விவசாயியின் 17 வயது மகள் பிளஸ் 2 முடித்து, கல்லூரியில் சேர விண்ணப்பித்து வீட்டில் இருந்தார்.

இந்நிலையில், மேட்டுப்பட்டி பகுதி விவசாயிகளிடம் தினந்தோறும் பூக்கள், துளசி ஆகியவற்றை சேகரித்து விற்பனைக்கு கொண்டு செல்லும் வேன் ஓட்டுநர் மேட்டுப்பட்டி புதூர் பகுதியைச் சேர்ந்த அன்பரசன் (39), மாணவியிடம் கைப்பேசி எண்ணை கேட்டுள்ளார்.

இதுகுறித்து சிறுமியின் உறவினர் அன்பரசனை கண்டித்துள்ளார். இதைத் தொடர்ந்து, அன்பரசனின் நண்பர் மணிகண்டன் (36) அவரிடம் தகராறு செய்துள்ளார். சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் வழக்குப் பதிவுசெய்த வாழப்பாடி அனைத்து மகளிர் போலீஸார், வேன் ஓட்டுநர் அன்பரசன் மற்றும் அவரது நண்பர் மணிகண்டன் ஆகிய இருவரையும் போக்சோ சட்டத்தின்கீழ் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிறுமிக்கு பாலியல் தொல்லை: போக்சோ வழக்கில் சகோதரர் கைது

ஆத்தூர், ஜூன் 18: ஆத்தூர் அருகே 7 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக அவரது சகோதரரை போக்சோ வழக்கில் ஆத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

ஆத்தூரை அடுத்த மல்லியகரை காவல் நிலைய எல்லைக்குள்பட்ட கந்தசாமிபுதூர் அரசநத்தம் மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த சிவகுமாரின் முதல் மனைவி இறந்துவிட்டார். அவருக்கு அருண்குமார் (22), நிஷாந்த் (20) என இருமகன்கள். இந்நிலையில் காவேரியை (29) சிவகுமார் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 7 வயதில் மகள் உள்ளார்.

இந்நிலையில், சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக அருண்குமார் மீது அண்மையில் ஆத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவேரி புகார் அளித்தார். அதன்பேரில் வழக்குப் பதிவுசெய்த போலீஸார், அருண்குமாரை போக்சோ வழக்கில் கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தனர்.

செவிலியருக்கு பாலியல் தொந்தரவு: வட்டார வளர்ச்சி அலுவலர் மீது வழக்குப் பதிவு

தம்மம்பட்டி, ஜூன் 18: செவிலியருக்கு பாலியல் தொந்தரவு அளித்ததாக, கெங்கவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர் மீது போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கெங்கவல்லி வட்டார வளர்ச்சி அலுவலரான இளங்கோவிடம் (59), தகரப்புதூர் ஊராட்சி, மூலப்புதூரில் துணை சுகாதார நிலையத்தில் செவிலியராக பணிபுரியும் பெண், தங்களுக்கு பணி செய்ய மூலப்புதூரில் ஓர் அறையை ஒதுக்கித்தருமாறு அண்மையில் கேட்டுள்ளார்.

அதையடுத்து, மூலப்புதூர் துணை சுகாதார நிலையத்துக்கு வந்த இளங்கோ, தனக்கு ரத்த அழுத்தத்தை சோதிக்குமாறு செவிலியரிடம் கூறியுள்ளார். அப்போது, செவிலியரிடம் அவர் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக தெரிகிறது.

இதுகுறித்து செவிலியர் தனது சகோதரர் மணிகண்டனிடம் கூறியுள்ளார். ஆத்திரமடைந்த மணிகண்டன், கெங்கவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவிடம் இதுகுறித்து தகராறு செய்து அவரை தாக்கியதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, கெங்கவல்லி காவல் நிலையத்தில் மணிகண்டன் மீது இளங்கோவும், இளங்கோ மீது பாலியல் சீண்டலுக்குள்ளான செவிலியரும், மணிகண்டனும் புகார் அளித்தனர்.

இதுகுறித்து சேலம் எஸ்.பி. எஸ்.குத்தாலிங்கம் உத்தரவின்போரில், ஆத்தூர் டிஎஸ்பி சத்யராஜ் நேரில் சென்று வியாழக்கிழமை இரவு விசாரித்தார். இதுகுறித்து கெங்கவல்லி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

கக்கன் பிறந்த நாள் விழா

சேலம், ஜூன் 18: சேலம் புறநகர் மாவட்ட தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி கக்கனின் 119-ஆவது பிறந்த நாள் விழா சேலத்தில் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

சேலம் உடையாப்பட்டி கக்கன் காலனியில் உள்ள கக்கன் சிலைக்கு தமாகா புறநகர் மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் எஸ்.செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, பொதுமக்களுக்கும், பள்ளி குழந்தைகளுக்கும் இனிப்புகள் வழங்கினார்.

இதில், மாநில செயற்குழு சிறப்பு அழைப்பாளர் விஸ்வநாதன், மாவட்ட எஸ்.சி., எஸ்.டி. பிரிவு தலைவர் முனுசாமி, துணைத் தலைவர்கள் வீராணம் கிருஷ்ணன், நல்லதம்பி, பொருளாளர் எல்ஐசி நாகராஜ், மாவட்டச் செயலாளர் வாசுதேவன், இளைஞரணி மாவட்டத் தலைவர் அன்பு ரோஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தெருநாய்களுக்கு தடுப்பூசி

தம்மம்பட்டி, ஜூன் 18: தம்மம்பட்டியில் தெருநாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

தம்மம்பட்டியில் தெருநாய்களுக்கு கருத்தடை மற்றும் ரேபிஸ் தடுப்பூசி செலுத்தும் பணியில் உள்ளாட்சி அமைப்பின் தூய்மைப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

வியாழக்கிழமை வரை 20 தெருநாய்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள தெருநாய்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட உள்ளதாகவும் பேரூராட்சி பணியாளர்கள் தெரிவித்தனர்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
(A Government of India Undertaking)
மண்டல அலுவலகம் : IOB Lவர்ஸ், 12/1 A P T ரோடு, பார்க் ரோடு, ஈரோடு-638 003. போன் : 0424-2213165, 2214897

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு முறையிலான பொது ஏல அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல அறிவிப்பு மற்றும் மறுசீரமைப்பு பிணையநுலன் அமலாக்கத்தின் கீழ் நிதி சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி சட்டம் 2002, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6)ன் கீழ் உள்ள விதிமுறைகளின்படி படிக்கவும்.

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரரின் சொத்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டு, வங்கியானது பிரிவு 13 (2) சர்பாஸி சட்டம் 2002ன் கீழ் கடன்தாரர் செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறியதால், கீழ்க்கண்ட அசையாச் சொத்தை "உள்ளது உள்ள இடத்தில், உள்ளது உள்ளபடி" என்ற அடிப்படையில் இதன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு வங்கியின் நிலுவைகளை வட்டி மற்றும் இதர செலவுகளை வசூலிக்கும் பொருட்டு விற்பனை செய்ய சட்டப்பிரிவு 13 (4) ன்படி விதி கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்ய வங்கியால் எலக்ட்ரானிக் முறை ஏலம் மற்றும் விற்பனை அறிவிப்பு கீழ்க்கண்ட இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது. https://baanknet.com/ eauction-psb/bidder-registration

கடன்தாரர் மற்றும் உத்திரவாதம் அளித்தவர் பெயர் & முகவரி: 1.M/s.ஜ வாட்டர் (கடன்தாரர்) உரிமையாளர் : திரு.ஜயப்பன்.என். 23, தள்ளன்குளம், குப்பாண்டபாளையம், நாமக்கல் - 638183. தொழிற்சாலை முகவரி : M/s.ஜ வாட்டர் உரிமையாளர் : திரு.ஜயப்பன்.என், 23, தள்ளன்குளம், குப்பாண்டபாளையம், நாமக்கல் - 638183. 02. திரு.என்.ஜயப்பன், த/பெ. நாச்சிமுத்து, 19சி கிழக்கு காவேரி நகர், குமாரபாளையம், நாமக்கல் - 638183. மற்றும் உத்திரவாதம் அளித்தவர்கள் : இல்லை

வங்கி கிளையின் பெயர் : குமாரபாளையம் கிளை (1350), கந்தசாமி பிளாசா, கந்தம் மில் காம்பவுண்ட் சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம் - 638183. போன் : 89259 51350 ஈமெயில் : iob1350@iob.bank.in

13.01.2026 அன்று எங்கு இருக்கிறதோ, என்ன உள்ளதோ, எது இருந்தாலும் உள்ளது உள்ளபடி.

நிலுவை தொகை : ரூ.33,40,060/- (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து நாற்பது ஆயிரத்து அறுபது மட்டும்) 31.05.2026 தேதி வரை; அத்துடன், மற்றும் செலவுகள்/கட்டணங்கள்.

அசையாச் சொத்துக்கள் விபரம்

வகை: குடியிருப்பு மற்றும் தொழிற்துறை சொத்து.

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் புதிய மாவட்டம், குமாரபாளையம் சார்-பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு வட்டம், குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமம், கல்லாங்குளம் தோட்டம், Birnash எண் 180, தற்போதைய புதிய எண் 507/B, பரப்பளவு 1.83.5 ஏக்கர், தீர்வை ரூ. 7.05 (பட்டா எண் 1504) இதன் எல்லைகள்: கிழக்கு - செல்லமுத்துவின் நிலம்; மேற்கு - செல்லமுத்துவின் நிலம்; வடக்கு - இட்டேரி ரோடு மற்றும் மேட்டூர் கண்ணி வாய்க்கால், தெற்கு - இட்டேரி ரோடு. இப்பரப்பளவில் P.A. 20% சென்ட் (பு.ஹெக் 0.08.4) இதில் குடிநீர் வசதிக்காகப் பொதுவான ஒரு கிணற்றில் சரிபாதி உரிமை ஆகியவை அடங்கும். இச்சர்வே எண் நிலத்தில், வழக்கமான பாதை உரிமைகள், கால்நடைகள் மற்றும் வாகனங்களை எடுத்துச் செல்லும் உரிமைகள் மற்றும் இதர பயன்பாட்டு உரிமைகள் ஆகியவை அடங்கும். மேற்கூறிய சொத்துக்கள் குமாரபாளையம் கிராம ஊராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளன. அமைவிடம்: R.S.F எண் 507/8A & 507/8B, பட்டா எண் 1540 & 3150, கதவு எண் 3/471-2,3,4,5 & 6, கல்லாங்குளம் தோட்டம், குப்பண்டபாளையம் ஊராட்சி, குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமம், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் - 638008. சொத்து முகவரி: கதவு எண் 3/471-2,3,4,5 & 6, கல்லாங்குளம் தோட்டம், குப்பண்டபாளையம் பிரதான சாலை, குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமம், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் - 638008.

Reserve Price: Rs.13303600 (Excluding TDS of 1%)	முன்வைப்பு தொகை : Rs.1330360 (Excluding TDS of 1%)	ஏலகேட்பு அதிகரிப்பு தொகை Rs. 20,000/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் கணக்கு விபரம்	The property shall be sold to the successful bidder. The successful bidder (purchaser) as declared by the Authorised Officer shall deposit 25% of the sale price (less EMD amount) immediately on the same day and not later than the next working day in favour of "Indian Overseas Bank, Komarapalayam SARFAESI SALE PARKING ACCOUNT" to the credit of A/C No 13500113035001 Indian Overseas Bank, Komarapalayam Branch, Kandasamy Plaza, Sundaram Mill Compound, Salem Main Road, Komarapalayam-638183. Branch Code: 1350 IFSC Code: IOBA0001350. Ph: 8925951350	
IFSC Code	IOBA0001350	

தலைப்பு பற்றிய சரிபார்ப்புகள், ஆவணங்கள் மற்றும் ஆய்வுக்களுக்காக ஏலதாரர்கள் தொடர்பு கொள்ளலாம் : இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, குமாரபாளையம் கிளை, அலுவலக நேரத்தில் 20.06.2026 முதல் 22.07.2026 மாலை 4.00 மணிவரை. முன் நியமனத்துடன்

மின்ஏல செயல்பாட்டில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள் / வாங்குபவர்கள், சேவை வழங்குனரில் வலைத்தளமான https://baanknet.com/eauction-psb/bidder-registration. இல் பங்கேற்க வேண்டும்.

எலக்ட்ரானிக் ஏலத்தின் தேதி மற்றும் நேரம் : 23-07-2026 (வியாழக்கிழமை) காலை 11.00 மணி முதல் நண்பகல் 4.00 மணிவரை, சுய நீட்டித்தலாக, விற்பனை முடியும் வரை பத்து நிமிடங்கள் நீட்டிக்கப்படும்.

இணையதளத்தில் விண்ணப்பம் மற்றும் முன்வைப்பு தொகை செலுத்துவதற்கான நாள் : 20.06.2026 முதல் ஆரம்பம்

இடம் : குமாரபாளையம்
நாள் : 18.06.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி.

IDBI BANK

பிராந்திய அலுவலகம் : வேலூர்
எண்.5, 14வது கிழக்கு குறுக்கு வீதி 2வது தளம், காந்தி நகர், வேலூர் - 632 006
மொபைல் எண்கள் : J சந்தோஷ் குமார் (9491930339)/N கங்காதர் (9581909119)
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநுலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

ஐடிபிஐ வங்கி லிட்-டின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.13,60,331.42 (31.05.2026 தேதி அன்று) தொகையை திரு. V ஜெயராஜ் மற்றும் திருமதி. J ராஜாமணி என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, அடையான கவாதீனம் (Symbolic Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 24.07.2026 தேதியில் (காலை 10.30 மணி முதல் காலை 11.30 மணி வரை) இ-ஏலம் மூலமாக விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்), உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.61,00,000/- மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.6,10,000/-.

அசையாச் சொத்து விபரம்

தமிழ்நாடு, சேலம் மாவட்டம், சேலம் கிழக்குப் பதிவு மாவட்டம், ஆத்தூர் சார் பதிவு மாவட்டம், நரசிங்கபுரம் கிராமம், சர்வே எண்.128/3, இதிலமைந்த 1250 சதுரடி. குடியிருப்புக் கட்டிடக் கதவு எண்.56/402/A3

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.bankeauctionwizard.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் இணையதளத்தின் (www.idbi.bank.in) 'லிங்க்'கில் பார்வையிடலாம்.

தேதி : 19.06.2026
இடம் : வேலூர்

ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி லிட்.

IN THE HIGH COURT OF KARNATAKA, DHARWAD BENCH
MFA No. 101362/2018 (MV/SJ)
Substituted service of Notice by way of Paper Publication

Appellant :
1. THE DIVISIONAL MANAGER
NATIONAL INSURANCE COMPANY LIMITED,
DIVISIONAL OFFICE ARIHANT PLAZA,
OPP. SBI ZONAL OFFICE, KUSUGAL ROAD, HUBBALLI-580 023.
REPRESENTED BY ITS ADMINISTRATIVE OFFICER

(BY SRI. G. N. RAICHUR & SMT. S. G. RAICHUR, ADVS.)

Respondents :
1) SMT ANITA VATTI @ LAKSHMI
W/O. NARESH @ SUNIL LARI @ NARESH KUMAR VATTI,
AGE : 28 YEARS, OCC : HOUSEHOLD WORK
R/O. MOHAPAL VILLAGE, DIST. : BASTAR,
STATE : CHATTISGADH-514 534
AND OTHERS

TO : RESPONDENT NO. 4

4) NATESHAN P. S/O. PALANIMUTHU
R/O. #3 /125 SEELIAMPATTY POST, TQ : ATTUR, DIST. SALEM,
STATE : TAMILNADU - 600 004.

*****

Take Notice that the Appellant above named has preferred above mentioned Miscellaneous First Appeal before this Court being aggrieved by the Judgement/Award/Order passed on 29.01.2018 by THE II ADDL. SENIOR CIVIL JUDGE AND ADDL. MACT, RANEBENNUR in E.C.A. No. 180/2014 and the Court required you to appear before this Hon'ble Court in person or through an advocate duly instructed to appear on 22.07.2026 at 10.30 AM, failing which the matter would be heard and decided in your absence.

Given under my hand and the seal of this court on 08th DAY OF JUNE 2026.

BY ORDER OF THE COURT
Sd/- (NEELAPPA BOVER) ASSISTANT REGISTRAR.

பொது அறிவிப்பு

ICICI Bank

கிளை அலுவலகம்:ICICI பேங்க் லிமிடெட் . அலுவலக எண் 201-B, 2வதுதளம், சாலை எண் 1,மனை எண் B 3, WIFI IT பார்க், வேகில் தெழிற்பேட்டை, தானே (மேற்கு)-400604

இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், பின்வரும் கடன்தாரர்கள், கடன் வசதி பெற்று அந்தக் கடன் அசலையும், வட்டியையும் முறையாகச் செலுத்தத் தவறிவிட்டனர். அதனால் அந்த கடன்கள் வாராக் கடன்கள் (NPA) என்ற பிரிவில் சேர்க்கப்பட்டு விட்டன. அதையடுத்து, 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 13 (2) கீழ், கடன்தாரர்களின் கடைசியாக தெரிந்த முகவரிக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டன எனினும் அது பட்டுவாடா ஆகவில்லை. அத்துடன் கீழ்காணும் கடன்தாரர்களுக்கு தகவல் அளிக்கும் பொருட்டு அதன் விவரம் இந்த பொது அறிவிப்பு மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றது.

வ. எண்	கடன்தாரர்/ கூட்டுக் கடன் தாரர்/ ஜாமீன் தாரர் /பெயர் முகவரி & கடன் கணக்கு எண்	அடமான சொத்து / நடவடிக்கைக்குட்பட்ட சொத்து/ முகவரி	கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி/ அத்தேதிப் படியான கடன் பாக்கி ரூ.	NPA தேதி
1.	1. M/s. R.B.Creation/ திரு. சாதுலராம் க்ருபாராம் குபாஜி/ திருமதி. சதாரு (W/O: சாதுல் ராம்)/ 136805502181/01, கடை எண். 2204/B/A, சுரேந்திர ஹவுஸ் அருகில், பிரகாஷ் பள்ளி அருகில், ஜேஷிங்பாய் நி வாடி அருகில், பஞ்சரத்னா காம்ப்ளக்ஸ் எதிரில், ஃபௌஜ்தாரி கோர்ட் எதிரில், கீகாந்தா, கலுபூர், குஜராத், அகமதாபாத்- 380 001.	கிழக்கு பகுதி சொத்து (தனியார் சொத்து- சிட்டி சர்வே எண். 2204/B பகுதி), மோஜே கலுபூர்-3, தாலுகா மற்றும் துணை-பதிவு மாவட்டம் அகமதாபாத் சிட்டி-1 (கலுபூர்-3), பதிவு மாவட்டம் அகமதாபாத் (நகராட்சி குடியிருப்பு எண். 00119-69-1801-0001-S/ பரப்பளவு 19.00.90 சதுர மீட்டர் / எல்லைகள்:-வடக்கு - சிட்டி சர்வே எண். 2205 சொத்து / தெற்கு- கீகாந்தா நீதிமன்றத்திலிருந்து வட்டங்கா சால் செல்லும் சாலை / கிழக்கு சிட்டி சர்வே எண்.2204/B- தனியார் எண்.B/ மேற்கு சிட்டி சர்வே எண்.2213/A)	மே 09, 2026 ரூ.66,73,562.97/-	05/03/2026

மாற்றுமுறை சேவையில் அறிவிப்பினை அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கடன் பாக்கி முழுவதையும் வங்கியிடம் செலுத்த வேண்டும் என கடன்தாரர்கள் மற்றும் அல்லது ஜாமீன்தாரர்கள் (பொருந்துகின்றபடி) அறிவுறுத்தப் படுகின்றனர். தவறும் பட்சத்தில், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்ட ஷரத்துகள்படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேதி:ஜூன் 19, 2026
இடம்: சேலம்

ஒம்/- அதிகாரபூர்வ அலுவலர்
ICICI பேங்க் லிமிடெட்

பாங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
இந்தியாவின் பன்னாட்டு வங்கி

பேங்க் ஆப் பரோடா
P N பட்டி கிளை : சேலம் மெயின் ரோடு, கருமலைக்க